**அக்டோபர் – 03**

# TNPSC துளிகள்

- பி கே குப்தா என்பவர் தேசிய கட்டிட கட்டுமானக் கழகத்தின் புதிய தலைவராகவும் நிர்வாக இயக்குநராகவும் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி வரை நியமிக்கப் பட்டுள்ளார்.
    - அவர் சிவ் தாஸ் மீனாவுக்குப் பிறகு இந்தப் பதவியைப் பெறவிருக்கிறார்.
- சண்டிகர் பல்கலைக் கழக மாணவர்கள் இயக்க முறைமையின் (Operating System – OS) கர்னல் (kernel) பகுதியில் செயலாற்றி இந்தியாவின் மிகவும் பாதுகாப்பான மற்றும் சிறிய இயக்க முறைமை (OS) 'தொடக்கப் புதிர்களை' உருவாக்கியுள்ளனர்.

# தேசியச் செய்திகள்

## 2019 ஆம் ஆண்டிற்கான MASCRADE இன் 6வது பதிப்பு

- கடத்தல் மற்றும் கள்ளநோட்டு வர்த்தகத்திற்கு எதிரான சர்வதேச மாநாட்டு இயக்கத்தின் (International Conference Movement Against Smuggling and Counterfeit Trade - MASCRADE) 6வது பதிப்பு 2019 ஆம் ஆண்டு புதுதில்லியில் நடத்தப் பட்டது.
- இந்த நிகழ்வின் கருப்பொருள்: "கள்ளநோட்டு, கடத்தல் மற்றும் திருட்டு ஆகியவற்றைத் தடுப்பதற்கான ஒரு வெற்றி பெறும் உத்தி".
- பொருளாதாரத்தை அழிக்கக் கூடிய கடத்தல் மற்றும் கள்ள நடவடிக்கைகளுக்கு எதிரான இந்த வருடாந்திர நிகழ்வை இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்புக் குழு ஏற்பாடு செய்தது.




## ஆரோக்கிய மந்தன் பட்டறை

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷவர்தன் புது தில்லியில் ஆரோக்கிய மந்தன்' என்ற 2 நாள் தேசிய பட்டறையைத் திறந்து வைத்தார்.
- இந்நிகழ்வு தேசிய சுகாதார ஆணையத்தால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- இது செப்டம்பர் 23, 2018 அன்று தொடங்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் - பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனாவின் முதல் ஆண்டு நிறைவைக் குறிக்கும் நோக்கத்தைக் கொண்டது.
- இந்தப் பட்டறையில், ஆயுஷ்மான் பாரத்திற்காக 'பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா' என்ற புதிய ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கைபேசி செயலியானது அறிமுகப்படுத்தப் பட்டது.

- ஸ்டார்ட் அப் இந்தியாவுடன் இணைந்து ஆயுஷ்மான் பாரத் ஸ்டார்ட்-அப் கிராண்ட் சேலஞ்ச் ஆனது தொடங்கப் பட்டுள்ளது.
- இப்பட்டறையின் போது ஒரு நினைவு தபால்தலையும் அறிமுகப் படுத்தப்பட்டது.




## போதைப் பொருள் நிலைமை குறித்த சர்வதேச மாநாடு

- "ஒரு விரிவான அணுகுமுறையை வளர்ப்பதற்கானப் பிராந்திய மாநாடு: ஆப்கானிஸ்தானில் போதைப் பொருள் கடத்துபவர்களின் சட்டவிரோத கடத்தல் மற்றும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் போதைப் பொருள் நிலைமை ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவது" என்ற 2 நாள் மாநாடு மணிப்பூரில் உள்ள இம்பாலில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டை மணிப்பூர் மாநில அரசு மற்றும் போதைப் பொருள் & குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அலுவலகம், தெற்காசியாவின் பிராந்திய அலுவலகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.
- உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் சட்டவிரோதக் கடத்தலை எதிர்ப்பதற்கு ஒருங்கிணைந்த எல்லை மேலாண்மைச் செயல்முறையுடன் கூடுதலாக தெற்காசியப் பிராந்தியப் புலனாய்வு மற்றும் ஒருங்கிணைப்பு மையத்தை (SARICC - South Asia Regional Intelligence and Coordination Centre) வலுப்படுத்தவும் இந்த மாநாடு பரிந்துரைக்கிறது.

## நுகர்வோர் செயலி

- மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் புது தில்லியில் 'நுகர்வோர் செயலி' ஒன்றைத் தொடங்கினார்.
- இந்த செயலியானது பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதையும்

நுகர்வோர் தொடர்பான பிரச்சினைகளில் மதிப்புமிக்க தீர்வுகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அந்த குறைகளானது 20 நாட்களுக்குள் ஒரு குறிப்பிட்ட காலவரையறையில் தீர்க்கப் படும்.
- ‘டிஜிட்டல் இந்தியா’ நோக்கங்களை வலுப்படுத்தும் இந்த செயலியானது கைபேசி சாதனங்கள் வழியாக நுகர்வோர் குறைகளுக்கு ஒரு ஒற்றைத் தீர்வை வழங்குகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## நிகழ்நேர தாக்கல் முறை - ARTIS

- வர்த்தகத் தீர்வுகள் இயக்குநரகம் (Directorate General of Trade Remedies - DGTR) ஆனது இந்தியத் தொழில் மற்றும் பிற பங்குதாரர்களுக்கான வர்த்தகத்தில் தீர்வுகளுக்கான நிகழ்நேர முறைகளுக்கான (Applications for Remedies in Trade for Indian Industry and other Stakeholders - ARTIS) விண்ணப்பங்களை அறிமுகப் படுத்தியது.
- விலைபொருள்களைப் பதுக்கி வைத்தல் தொடர்பான சிக்கல்களை விரைவாகத் தீர்க்க உள்நாட்டுத் தொழில்துறையால் விலைபொருள் குவிப்புக்கு எதிரான விண்ணப்பங்களைத் தாக்கல் செய்ய இது பயன்படுத்தப்படும்.

### *வர்த்தகத் தீர்வுகள் இயக்குநரகம் (DGTR)*

- இந்த அமைப்பு வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- விலைபொருள்களைப் பதுக்கி வைத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள், குறிப்பிட்ட பொருள்களின் மீது இறக்குமதி வரியை அதிகரித்தல், பாதுகாப்பு நடவடிக்கைகள் உட்பட அனைத்து வர்த்தக குறைதீர்ப்பு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான உச்ச பட்ச தேசிய அளவிலான ஆணையமாக இது விளங்குகின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## அருகலை (WiFi/வைஃபை) வசதி கொண்ட 5000வது ரயில் நிலையம்

- மேற்கு வங்கத்தின் மிட்னாபூர் ரயில் நிலையம் ஆனது வைஃபை மூலம் இயக்கப்பட்ட 5000வது ரயில் நிலையமாக மாறியது.
- வைஃபை வழங்கும் திட்டம் ரெயில்டெல் (RailTel) என்ற நிறுவனத்தால் 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- மும்பை மத்திய ரயில் நிலையம் முதல் முறையாக வைஃபை செயல்படுத்திய இடத்தில் உள்ளது.
- ரெயில்டெல் என்பது ரயில்வே அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு பொதுத்துறை பிரிவு ஆகும்.

# மாநிலச் செய்திகள்

## இந்தியாவில் முழுமையாக மின்மயமாக்கப்பட்ட மாநிலம்

- சௌபாக்யா திட்டத்தின் கீழ் 5 லட்சத்து 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின்சாரம் வழங்கியதை அடுத்து தெலுங்கானா மாநிலமானது நாட்டின் முழு மின்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக மாறியுள்ளது.

*சௌபாக்யா திட்டம்*

- பிரதான் மந்திரி சஹாஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா (Pradhan Mantri Sahaj Bijli Har Ghar Yojana ) என்று அழைக்கப்படும் இந்த திட்டமானது அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது மத்திய அரசால் 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அறிவிக்கப் பட்டது.

## பான் மசாலா மீதான தடை

- உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மெக்னீசியம் கார்பனேட், நிகோடின், புகையிலை, கனிம எண்ணெய் மற்றும் சுவையூட்டியான ‘சுபாரி’ ஆகியவற்றைக் கொண்ட சில வகை பான் மசாலாவைத் தடை செய்துள்ள இந்தியாவின் மூன்றாவது மாநிலமாக ராஜஸ்தான் உருவெடுத்துள்ளது.
- இந்த தயாரிப்புகளின் உற்பத்தி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை போன்றவை கூட தடை செய்யப் பட்டுள்ளன.
- முன்னதாக மகாராஷ்டிராவும் பீகாரும் இதைத் தடை செய்திருக்கின்றன.

## சத்தீஸ்கர் அரசாங்கத்தின் புதிய திட்டங்கள்

- சத்தீஸ்கர் அரசு 5 புதிய திட்டங்களை அறிமுகப் படுத்தியது.
- அந்த திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு

*1. முக்கிய மந்திரி சுபோஷன் அபியான்*

- இந்த முதலமைச்சர் ஊட்டச் சத்து திட்டத்தின் கீழ், ஊட்டச் சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் இரத்த சோகை கொண்டப் பெண்களுக்கு பஞ்சாயத்துகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உதவியுடன் சுத்தமான மற்றும் சத்தான உணவு வழங்கப் படுகிறது.

*2. முக்கிய மந்திரி ஹாத் பஜார் கிளினிக் யோஜனா*

- இந்த முதலமைச்சர் சந்தை மருத்துவத் திட்டத்தின் கீழ், மாநிலத்தின் தொலைதூரப் பழங்குடியினர் மற்றும் வனப் பகுதிகளில் சுகாதார வசதிகளை வழங்குவதற்காக சுகாதாரத் துறையின் நடமாடும் குழுக்கள் மருத்துவர்கள் மற்றும் தேவையான உபகரணங்களுடன் உள்ளூர் சந்தைகளைப் பார்வையிடும்.

*3. முக்கிய மந்திரி ஷஹாரியா ஸ்லம் ஸ்வஸ்திய யோஜனா*

- இந்த முதலமைச்சர் நகர்ப்புற சேரி சுகாதார திட்டத்தின் கீழ் கிடைக்கக் கூடிய சுகாதார வசதிகளுடன் 7 லட்சத்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் நடைமுறைப் படுத்தப்படும்.
- ஆரம்பத்தில் 3 நடமாடும் மருத்துவ குழுக்கள் ராய்ப்பூரிலும், தலா 2 நடமாடும் மருத்துவ குழுக்கள் பிலாய் மற்றும் கோர்பாவிலும், தலா ஒன்று மற்ற நகராட்சிகளிலும் நிறுத்தப்படும்.

*4. அனைவருக்குமான பொது விநியோக முறை*

- இந்தப் பொது விநியோக முறை திட்டத்தின் கீழ், பொது வகை குடும்பங்கள் (வரி செலுத்துவோர் மற்றும் வரி செலுத்தாதோர்) உணவு தானியங்கள் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- ஒரு கிலோ 10 ரூபாய் என்ற விலையில் ஒற்றை உறுப்பினர்களைக் கொண்ட

குடும்பங்கள் மாதத்திற்கு 10 கிலோ அரிசி பெறவும், 2 உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள் மாதத்திற்கு 20 கிலோ அரிசியும், 3 பேர் அல்லது 3க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள் ஒரு மாதத்திற்கு 35 கிலோ அரிசியும் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர் .

*5. முக்கிய மந்திரி வார்டு காரியாலயாஸ்*

- இந்த முதலமைச்சர் வார்டு அலுவலகங்கள் திட்டத்தின் கீழ், நகர மக்களுக்கு அவர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப குடிமக்கள் சேவைகள் மற்றும் வசதிகள் உடனடியாக கிடைக்க வழிவகை செய்யப் படும்.

### தேசிய சட்டப் பல்கலைக் கழக மசோதா 2019

- ஜம்மு-காஷ்மீர் ஆளுநர் சத்ய பால் மாலிக் ஜம்மு-காஷ்மீர் தேசிய சட்ட பல்கலைக் கழக மசோதா 2019 க்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- இந்த மசோதாவானது ஜம்மு-காஷ்மீரில் ஒரு தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சட்டம் மற்றும் சட்ட செயல்முறைகள் பற்றிய அறிவைப் பரப்புவதற்கும் அரசியல், சமூக மற்றும் பொருளாதார நீதியை அடைய சட்ட விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கும் உதவும்.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


### மைசூரு தசரா திருவிழா

- பத்து நாள் நடைபெறும் மைசூரு தசரா திருவிழாவானது கர்நாடகாவில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.
- விழாக்கள் மற்றும் ஒரு பெரிய ஊர்வலம் ஆகியவற்றிற்குப் பாரம்பரியமாக மைசூரு மன்னர் தலைமை தாங்குகிறார்.
- இந்த விழாவில் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெறும்.
- மைசூரின் முன்னாள் ஆட்சியாளரான ஜெயசாமராஜ உடையாரின் பிறந்த நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டின் தசரா விழாவில் சேர்க்கப் பட்டுள்ளது.
- மைசூருவில் நடந்த தசரா திருவிழா ஆனது 2010 ஆம் ஆண்டில் தனது 400வது ஆண்டு நிறைவு விழாவை நிறைவு செய்தது.



## தெலுங்கானா மலர்த் திருவிழா - பத்துகம்மா

- தெலுங்கானா மாநிலத்தின் மலர்த் திருவிழாவான பத்துகம்மா திருவிழாவானது வாரங்கல் மாவட்டத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றது.
- ஒன்பது நாள் நிகழ்வான இந்த மலர்த் திருவிழா ஆனது 2019 ஆம் ஆண்டு 29 செப்டம்பர் ஆம் தேதி முதல் அக்டோபர் 6 ஆம் தேதி வரை கொண்டாடப்படும்.
- பத்துகம்மா திருவிழாவானது ஷரத் ருது ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கின்றது.
- பத்துகம்மா என்பது அடிப்படையில் கூம்பு வடிவ மலர் அடுக்குகள் கொண்ட அமைப்புக்கள் ஆகும். இவை நகரத்தின் தெரு மூலைகளிலும் கோயில்களிலும் வைத்து கொண்டாடப்படுகின்றன.
- இந்தத் திருவிழாவானது தெலுங்கானா மக்களின் கலாச்சாரம் மற்றும் அடையாளத்தை பிரதிபலிக்கிறது. மேலும் இது மஹா கௌரியின் வழிபாட்டை உள்ளடக்கியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★